Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




ஹஸ்ரத் முஹையுதின்அல்- கலீபஃத்துல்லாஹ் முனீர் அஹ்மத் அஜீம் (AS)


**10 MAY 2019**
(04 Ramadan 1440 AH)


**மொழியாக்கம்/Translation**
**TJSI பத்திரிகை குழுமம்- TJSI publication group**
**வெளியீட்டு**
**அமீர்,**
**ஜமாஅத் தமிழ்நாடு**



**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**


# ஜுமுஆ பேருரை

## தலைப்பு :

## “பிறை பார்த்தலும் ரமலான் நோன்பும்”

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு ஹஸ்ரத் கலீபத்துல்லாஹ்(AS) அவர்கள் தஷ்ஹுத் தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதி **"பிறை பார்த்தலும் ரமலான் நோன்பும்"** என்ற தலைப்பில் ஜுமுஆ பேருரை நிகழ்த்தினார்கள்

`

شَهۡرُ رَمَضَانَ ٱلَّذِیٓ أُنزِلَ فِیهِ ٱلۡقُرۡءَانُ هُدًى لِّلنَّاسِ
وَبَیِّنَـٰتٍ مِّنَ ٱلۡهُدَىٰ وَٱلۡفُرۡقَانِۚ فَمَن شَهِدَ مِنكُمُ ٱلشَّهۡرَ فَلۡیَصُمۡهُۖ

"ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பட்ட மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக் கூடியதும் (நன்மை தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே, உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் (ரமலான் மாதத்தின் முதல் பிறையை) அதில் நோன்பு நோற்க வேண்டும். (அல்-பக்கரா 2:186)

**(ஷஹ்ரு ரமலானல்லதி உன்ஸில ஃபீஹில் குர்-ஆனு ஹுதல்-லின்னாஸி வபய்யினாத்திம் மினல் ஹுதா வல் ஃபுர்கான். ஃபமன்- ஷஹித- மின்குமுஷ்-ஷஹ்ர ஃபல்- யஸும்ஹு).**

அல்ஹம்துலில்லாஹ், ஸும்மா அல்ஹம்துலில்லாஹ், ரமலான் மாதம் மீண்டும் ஒரு முறை தனது மிகப்பெரும் அருட்கொடைகளுடன் நம்மை வரவேற்பதுடன், தனது அனைத்து அருட்களிலும் பங்குபெறும் படியும் நம்மை அழைக்கின்றது. இதன்மூலமாக, அல்லாஹ்வின் அனைத்து அருட்கொடைகளையும் நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்திய நாட்டில் தமிழ்நாட்டில் உள்ள எனது சகாபிகளில் ஒருவரிடமிருந்து வந்த ஒரு கேள்வியின் அடிப்படையில், ரமலான் மாதத்தின் நோன்பு, மற்றும் பிறை காணுதல் தொடர்பாக, நான் சிறிய ஒளியை ஒட்டுமொத்த முஸ்லிம் உம்மத்திற்காகவும் உதிர்க்க விரும்புகின்றேன்.

மேலும், அல்லாஹ்வுடைய அருளுக்குரிய வசனங்களையும், கட்டளைகளையும் கொண்ட திருக்குர்ஆன், மற்றும் **ஹஸ்ரத் முஹம்மது (ஸல்)** அவர்களின் நபிமொழிகள், ரமலான் மாத நோன்பை ஆரம்பிப்பதற்கு பிறைக் காண்பதன் பக்கம் நம்மை கவனம் ஊட்ட வைக்கின்றது. மேலும் இதைப்போன்ற நிலையே, பெருநாள் கொண்டாட்டங்களுக்கு முந்தைய நாளான இறுதி நோன்பை முறிக்கும் விஷயத்திலும் பொருந்துகின்றது. அன்றியும், ஒரு நபிமொழியையும் இங்கு மேற்கோள்காட்ட

விரும்புகின்றேன். அதாவது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுவதாக **அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி)** அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

**'ரமலான் பிறையை நீங்கள் காணும் வரை நோன்பை நோற்காதீர்கள்; (மறு) பிறையைக் காணும்வரை நோன்பை விடாதீர்கள்; உங்களுக்கு மேக மூட்டம் தென்படுமானால் (முப்பது நாள்களாக) அதைக் கணித்துக் கொள்ளுங்கள்.' (ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம்)**

அதாவது, நான் மேற்குறிப்பிட்ட திருக்குர்ஆன் வசனம், மற்றும் ஹதீஸிலிருந்து, இஸ்லாத்தில் பிறைக்காண்பது என்பது மிக முக்கியமான ஒன்றாக மிகத் தெளிவாக நமக்கு புலனாகின்றது. அதுவும், குறிப்பாக அல்லாஹ் மற்றும் அவனது தூதர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இஸ்லாமிய காலண்டர் என்பது பிறையை முற்றிலும் அடிப்படையாகக் கொண்டே உள்ளது. அதாவது, பிறையைக் காண்பதன் அடிப்படையிலேயே, பிறைக் காலண்டர் அமைந்துள்ளது.

மேலும் அல்லாஹ்வின் அருளால், **ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்)** அவர்கள், இவ்வாறான முக்கியமான தலைப்புக்களில் தனது வழிகாட்டுதலை, முஸ்லிம்களின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டே, ஒவ்வொரு தனிப்பட்ட நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கும் வழங்கியுள்ளார்கள்.

எனினும், இன்று **ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்**) அவர்களின் உம்மத் பிரிந்திருப்பதைக் காண்பது நமக்கு மிகவும் வருத்தம் அளிக்கின்றது. அதாவது, ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தவர்களும், பிறையைக் காண்பதற்கு அவரவர்களின் நாடுகளைப் பின்பற்றியோ, அல்லது இன்னும் மிக நவீன ஒளியியல் உபகரணங்களின் உதவியுடனோ, அல்லது மிகவும் அனுகூலமான சாதனங்களான பைனாக்குலர்கள், தொலைநோக்கிப் போன்றவற்றின் மூலமாகவோ பிறையைப்பார்த்து முடிவைகளை தாங்களே எடுக்கின்றனர்.

மேலும், அவர்களின் உம்மத்தில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையின் காரணமாகவே, இத்தகைய கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இந்நிலையில், இதனை இஸ்லாமோ, திருக்குர்ஆனோ, அல்லது **நபி பெருமானாரின்** ஸுன்னத்தோ நமக்கு எக்காலத்திலும் போதிக்கவில்லை. அன்றியும், நம் அனைத்து விஷயங்களும் சுமூகமாக நடக்க வேண்டுமெனில், அவ்விடத்தில் சமாதானம், நல்லிணக்கம், ஒற்றுமையுடன் இருப்பது, ஆலோசனைகள் செய்வது, மற்றும் அனைத்து முஸ்லிம்களின் பொதுவான தலைவரால் ஒரு இறுதியான முடிவு எடுக்கப்படுவது முதலானவைகள் இருக்கவேண்டும். இதன் காரணமாகவே, அல்லாஹ் தனது வழிக்காட்டுதலை **ஒரு இறைத்தூதரின் வருகையின் மூலமாகவோ, அல்லது கலீஃபத்துல்லாஹ்வின் மூலமாகவோ (ஷரியத் இல்லாத தூதர்கள்) அந்தந்த காலக் கட்டத்திற்கு அனுப்பி**, அதன் மூலம், முஸ்லிம் உம்மத்தை

இஸ்லாத்தின் அனைத்து கோட்பாடுகளிலும் ஒன்றிணைய வைப்பதோடு, அவர்களின் அன்றாட வாழ்க்கையில் அவற்றை நடைமுறைப்படுத்தவும் வைக்கின்றான்

இருப்பினும், நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் யதார்த்த உண்மை என்னவெனில் **, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)** அவர் இவ்வுலகை விட்டு சென்ற பின்னர், அவர்கள் நமக்கு தனது பாரம்பரிய உரிமையாக விட்டுச் சென்றதில் இருந்து, தற்போதுள்ள நிலை முற்றிலும் மாறுபாட்டுள்ளது. அதாவது தற்போதுள்ள சூழ்நிலையில் ஒரே நாடாக இருப்பினும் பல்வேறு பிரிவுகள் உருவாகியுள்ளன. அன்றியும், ஒவ்வொரு பிரிவும் தங்களது சொந்த அளவுகோல்களுக்கு ஏற்ப, நோன்பை எப்போது வைப்பது ,மற்றும் நோன்பை எப்போது விடுவது போன்றவற்றை தாங்களே முடிவு செய்கின்றனர். எனவே இதன் காரணமாக, ஒரே நாடாக இருப்பினும் கூட, ரமலான் மாதம் துவங்குவதிலும், முடிவடைவதிலும் பல்வேறு தேதிகள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக, ஷவ்வால் மாதம் துவங்குவதும், மற்றும் பெருநாள் துவங்குவதும் கூட வெவ்வேறு தேதிகளில் அமைகின்றன.

மேலும், உலகின் ஏழு கண்டங்களான ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா (அல்லது ஓசியானியா), ஆபிரிக்கா, மற்றும் அண்டார்டிக்கா போன்றவைகள் உண்மையிலேயே பரந்த பிரதேசங்களாகவும், மற்றும் பிறை தென்படுவதில் ஒவ்வொரு பகுதிக்கு பகுதியும், ஒவ்வொரு நாட்டிற்கு நாடும் மாறுபடுவதாகவும் இருப்பது உண்மைதான்.

எனவே தான், ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்நாளில் ஒற்றுமையை வலியுறுத்தியிருந்தார்கள். அன்றியும் ரமலான், மற்றும் ரமலான் அல்லாத பிற மாதங்களிலும், அதாவது பிறை தென்படும் போதெல்லாம், அவர்களுடைய பகுதியில் உள்ள முஸ்லிம்கள் யாவரும் ஜமாத்தாக ஒன்று சேர்ந்து ஒரே நேரத்தில் நோன்பை நோற்பதும், மற்றும் நோன்பை முறிப்பதுமாக இருந்தார்கள். அதே நேரத்தில், பிற நாடுகளில், அல்லது பிறத்தொலை தூர இடங்களிலுள்ள மற்ற முஸ்லிம்களாக இருக்கும் பட்சத்தில், அவர்கள் தங்களது நாட்டில் தென்படும் பிறையின் அடிப்படையிலேயே நோன்பை நோற்பதும், மற்றும் அதற்கேற்ப செயல்பட்டும் வந்தார்கள்.

மேலும் காலப்போக்கில், புதிய நவீன யுகத்திற்குள் உலகம் நுழையும் பொழுது, நாடுகள் யாவும் அந்தந்த கண்டங்களுக்குள்ளேயே தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளவையாக அமைந்தன. ஆகவே, இதனால் ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டின் விவகாரங்களை நிர்வகிப்பதற்காக தங்களுக்கென்று சொந்த அரசாங்கத்தையும், சுதந்திரத்தையும் பெற்றிருந்தன. குறிப்பாக, இஸ்லாம், மற்றும் அதன் கொள்கைகளை தங்களுடைய வாழ்க்கையில் பயன்படுத்துவது தொடர்பான விஷயத்தில் இது பொருந்துவதாக இருந்தன. இருப்பினும், ஒவ்வொரு நாளும் இஸ்லாத்தில் புதிய பிரிவுகள் தினமும் உருவாகிக்கொண்டு இருப்பதை நினைக்கையில் மிகவும் வருத்தம் அளிக்கின்றது.

மேலும், அவர்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிளவுகளும் நாள்தோறும் அதிகமாகிக்கொண்டே இருக்கின்றன. அன்றியும், திருக்குர்ஆனின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதற்கும் ,மற்றும் முஸ்லிம்களின் நலனுக்காக முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கும் ஒரே இஸ்லாமிய உம்மத்தாக நின்று செயல்படுவதற்கு எந்தவொரு ஆலோசனையும் எடுக்கப்படவில்லை.

இதன் காரணமாகவே இக்காலத்தில், குறிப்பாக பெரிய நாடுகளில் கூட பல்வேறு குழப்பங்கள் உருவாகின்றன. உதாரணமாக, ரமலான் மாத நோன்பை நோற்பது, மற்றும் ஷவ்வால் மாதத்தின் முதல் நாளான ஈத் பெருநாளை வரவேற்பது, மற்றும் ரமலானின் நோன்பை விடுவது முதலானவற்றிற்கு பிறைப் பார்ப்பதை மட்டுமே உண்மையாக நம்பியிருக்கும் இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் கூட இவ்வாறாக நடக்கின்றன.

மேலும், **ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்)** அவர்களின் காலத்தை ஒப்பிடுகையில், இன்று அறிவியல் கண்டுபிடிப்புகள், மற்றும் பிறைப் பார்ப்பது தொடர்பான ஆய்வுகள் அனைத்தும் மிகவும் துல்லியமாக மாறியிருக்கின்ற போதிலும், இன்று ரமலானுக்காக பிறையின் நிலைகள், மற்றும் பிறைப் பார்ப்பது தொடர்பான ஒவ்வொரு கணக்கீடுகளிலும் எவை முக்கியமாக இருக்கிறதெனில், **நேரான கண்களின் மூலம் பிறையை உண்மையாகப் பார்ப்பதிலேயாகும்**. அதாவது, பிறையை உண்மையாக நேரில் பார்ப்பது என்பது, ஒவ்வொரு ஆயிரக்கணக்கானக் கணக்கீடுகளை விடவும் இது மிகவும் மதிப்பு வாய்ந்ததாகும். ஏனெனில், அல்லாஹ் தனது ஒவ்வொரு அடியாரின் பார்வை, மற்றும் நோக்கத்தை முழுமையாக அறிந்தவனாக இருக்கின்றான். அதுமட்டுமின்றி, பிற இஸ்லாமிய மாதங்களில், மற்றும் ரமலான், மற்றும் ஷவ்வால் மாதங்களில் பிறைப் பார்க்கும் சான்றுகளின் அடிப்படையில், அந்த நடப்பு ஆண்டின் இஸ்லாமிய காலண்டரை உருவாக்குவதற்கும், இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றன.

ஆகவே தான், அல்லாஹ்வும், அவனுடைய தூதர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களும், அனைத்து முஸ்லிம்களுக்கும் ஒரு எளிய வழிகாட்டுதலை வழங்கியியுள்ளார்கள். இதன்மூலம், ஒவ்வொரு மாதமும் புதியப் பிறையைப் பார்ப்பதன் அடிப்படையில், அவர்களால் எளிதாக இஸ்லாமியக் காலண்டரை அமைத்துக்கொள்ள முடிகின்றது. மேலும், இஸ்லாத்தில் முளைத்துள்ள பல்வேறு குழப்பங்களை அறிந்த பிறகு, நான் எனது அன்பற்குரிய ஸஹாபாக்களுக்கும், மற்றும் பிற உம்மத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இது தொடர்பாக சில வழிகாட்டுதல்களை வழங்க விரும்புகின்றேன்:

**<u>நாடு-வாரியாக:</u>** அதாவது, ஒரு நாடோ, அல்லது தீவோ, மொரீஷியஸைப் போன்று சிறியதாக இருந்து, பிறையைப் பார்ப்பது மிகவும் எளிதாக இருக்கும் பட்சத்தில், அங்கு இறையச்சமுள்ள ஒரு முஸ்லிம், தனது மனிதக் கண்களால் பிறையைப் பார்ப்பது

என்பதில் எந்த தவறுமில்லை. அதாவது, அவர் நமது ஜமாத்தைச் சேராதவராக இருப்பினும், அனைவருமே முஸ்லிம்களாக இருக்கும் பட்சத்தில், அவர் அல்லாஹ்வின் பெயரால் சத்தியம் செய்து தனது தகவலை உறுதிப்படுத்த இரண்டு சாட்சிகளைக் கொண்டு வரவேண்டும். அல்லது, தேவைப்பட்டால் பெரும்பாலான தருணங்களில் பைனாக்குலர், அல்லது தொலைநோக்கி மூலமாகவும் ஹிலால் பார்க்கப்படுகின்றது. (ஹிலால் என்பது புதிய பிறையின் சற்று லேசான வெள்ளியிலான ஒளிரும் பகுதியாகும்). ஆகையால், அந்த புதிய இஸ்லாமிய மாதத்தின் முதல் நாள் இவ்வாறாக உறுதி செய்யப்படுகின்றது. (அதாவது, இஸ்லாத்தின் அடிப்படையில், ஒரு நாள் என்பது சூரிய அஸ்தமனத்திற்கு பிறகுதான் உதயமாகின்றது).

**மாநிலம், மற்றும் மாவட்டம் வாரியாக**: மேலும், இந்தியாப் போன்ற பரந்த பிரதேசங்கள், மற்றும் நாடுகளில், மாவட்டங்களும், மற்றும் மாநிலங்களும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில், பிறையைப் பார்ப்பது என்பது அந்த தனிப்பட்ட மாநிலத்திற்கு உட்பட்டதாகவோ, அல்லது மாவட்டத்திற்கு உட்பட்டதாகவோ இருக்கின்றது. உதாரணமாக கேரளாவில், பிறைப்பார்த்து இருப்பதாக நிரூபிக்கப்படும் பட்சத்தில், கேரளாவில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் புனித ரமலான் நோன்பை நோற்க வேண்டும். எனினும், தற்போதுள்ள எதார்த்த நிலை என்னவெனில், அல்லாஹ்வின் தூதர் நபி பெருமானார் (ஸல்) அவர்களுடைய விருப்பங்களிலிருந்தும், மற்றும் உண்மை நிலையிலிருந்தும், இது முற்றிலும் வெகு தூரத்தில் உள்ளதாக இருப்பது எனக்கு நன்றாகப் புரிகின்றது. எனவே தற்போதுள்ள சூழ்நிலையில், கேரளாவைச் சேர்ந்த நமது ஜமாத்துல் ஸஹீஹ்-அல்-இஸ்லாத்தின் உறுப்பினர்கள், உண்மையில் பிறையைப் பார்த்தாக உறுதிப்படுத்தப்பட்டதைக் கேள்விப்படவோ, அல்லது அல்லாஹ்வின் பெயரால், மக்கள் அதனை சாட்சிப் பகர்வதைக் கேள்விப்படவோ செய்யும் பட்சத்தில், அவர்கள் நிச்சயமாக புனித ரமலான் நோன்பை நோற்பது அவசியமாகும். இதே நிலையே தமிழகத்திற்கும், மற்றும் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கும் பொருந்துகின்றது.

உதாரணமாக, தமிழ்நாடு போன்ற ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் கீழ் உள்ள ஒரு நீட்டிக்கப்பட்ட பகுதியாகவோ, அல்லது கடலோரப் பகுதியாகவோ இருக்கும்பட்சத்தில் அல்லது அவ்விடம் தமிழ்நாட்டை விட கேரளாவிற்கு மிக அருகில் இருக்கும்பட்சத்தில் (உ.ம். கோட்டார்), அல்லது கேரளா, மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களுடைய எல்லையில் இருக்கும் பட்சத்தில் (உ.ம் களியக்காவிளை),

அவ்விடத்தில், அல்லது அப்பகுதியிலுள்ள முஸ்லிம்கள் குறிப்பாக, **ஜமாத்துல் ஸஹீஹ்-உல்-இஸ்லாத்தின்** உறுப்பினர்கள், பிறையைப் பார்த்த அறிவிப்பை முதலில் கேள்விப்பட்டவுடனேயே, நிச்சயமாக ரமலான் நோன்பை நோற்கவேண்டும். மேலும், கேரளாவில் உள்ள மக்கள் முதலில் பிறையைப் பார்த்து இருந்தாலும், அவர்கள் உடனடியாக நோன்பு நோற்கவேண்டும். அல்லது தமிழ்நாட்டில் உள்ள மக்கள் முதலில் பிறையைப் பார்த்து இருந்தாலும், அவர்கள் உடனடியாக நோன்பு நோற்க வேண்டும்.

எனினும், **ஜமாத்துல் ஸஹீஹ்-உல்-இஸ்லாத்தின்** உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டியதிருப்பதனால், அந்த வட்டாரத்தில் உள்ள அனைவரும் ஒரே நேரத்தில் நோன்பை நோற்பதுடன், ஒரே நேரத்தில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றவும் வேண்டும்.

மேலும், எனது தனிப்பட்ட அனுபவத்திலிருந்து கூறுவதாவது, நான் ரோட்ரிக்ஸ் தீவில், அஹ்மதிய்யா முஸ்லீம் ஜமாத்தில் ஒரு மார்க்கப் போதகராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது, ரோட்ரிக்ஸைப் பொறுத்த வரையில், அது முற்றிலும் தனித் தீவாக இருப்பினும், மொரீஷியஸை சார்த்திருக்கும் ஒரு மாவட்டமாக இருப்பதன் காரணமாக, நான் மொரீஷியஸில் ரமலான், மற்றும் ஷவ்வால் மாத பிறை தென்பட்டதை கேள்விப்பட்டவுடன், நான் அதற்கேற்ப புனித ரமலான் நோன்பை நோற்கவும், மற்றும் முறிக்கவும் செய்வேன். நான் இவ்வாறு செயல்பட்டதன் காரணம், ரோட்ரிக்ஸ் என்பது மொரீஷியஸை சார்ந்துள்ள ஒரு பகுதியாக இருப்பதினாலாகும். இதற்கு மாறாக, நான் ரீயூனியன் தீவில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, இத்தீவு ரோட்ரிக்ஸை விட மொரீஷியஸிற்கு மிக அருகில் இருப்பினும், அது புனித ரமலான் நோன்பை நோற்பதிலும், அல்லது முறிப்பதிலும் மொரீஷியஸை சார்ந்திருக்கவில்லை. எனவே, ரீயூனியன் தீவில் உள்ள எனது பெருநாள் கொண்டாட்டங்கள் அனைத்தும், மொரீஷியஸிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தன.

மேலும், எனது தாழ்மையான பிரார்த்தனை மற்றும் விருப்பம் என்னவெனில், இன்ஷா-அல்லாஹ், வருங்காலத்தில், அல்லாஹ், அனைத்து நாடுகளிலும், மற்றும் மாநிலங்களிலும், நமது ஜமாத்து-ல்-ஸஹீஹ்-அல் இஸ்லாத்திற்கென்று சொந்தமான ஹிலால் குழுவை ஏற்படுத்த உதவிபுரிவதுடன், முறையான அறிவையும் வழங்க செய்யவேண்டும் என்பதாகும்.ஆகவே, நமது உறுப்பினர்களில் உள்ளவர்கள் ஒரு மாநிலத்திலோ, அல்லது ஒரு மாவட்டத்திலோ, அல்லது ஒரு நாட்டிலோ பிறையைப் பார்த்ததாக கூறும் பட்சத்தில், குறைந்தபட்சம், இறையச்சமுள்ள மூன்று நபர்களில், ஒருவர் அப்பிறையைப்பார்த்ததை அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்யவும், மற்ற இருவர் அதற்கு சாட்சியாக இருக்கவும் வேண்டும். இதுவே, புதிய இஸ்லாமிய மாதம் துவக்குவதற்கான வழிமுறையாக அனைத்து ஜமாத்து-ல்-ஸஹீஹ்-அல் இஸ்லாம் உறுப்பினர்களுக்கும் கூறப்பட்டுள்ளது.

**மேலும் உதாரணமாக, தமிழ்நாட்டில் உள்ள** ஜமாத்து-ல்-ஸஹீஹ்-அல் இஸ்லாத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், ரமலான் பிறையைப் பார்த்து, அதற்கு அல்லாஹ்வை சாட்சியாக அவர் வைப்பதுடன், தனது தகவலை உறுதிப்படுத்த இரண்டு சாட்சிகளையும் கொண்டுவரும் பட்சத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒட்டுமொத்த ஜமாத்து-ல்-ஸஹீஹ்-அல் இஸ்லாம் உறுப்பினர்களும் ரமலான் நோன்பை சேர்ந்து நோற்கவும், மற்றும் சேர்ந்து முறிக்கவும் செய்யவேண்டும். அத்துடன், ஈகைப்பெருநாளையும் தங்களுடைய பகுதிகளில் ஒன்று சேர்ந்து கொண்டாட வேண்டும். அதே நேரத்தில், இரண்டு மாநிலங்களுடைய எல்லையில் வசிக்கும் மக்கள், இரண்டு மாநிலங்களில், ரமலான் எந்த

மாநிலத்தில் முதலில் ஆரம்பிக்கின்றதோ,அதனை அவர்கள் முதலில் பின்பற்ற வேண்டும். ஏனெனில், நான் பலமுறை சுட்டிக்காட்டியதன் படி, ஒரு இஸ்லாமிய மாதம் என்பது 30 நாட்களுக்கும் அதிகமாக இருக்க முடியாது. அதாவது, ஒன்று அது 29 நாட்களாகவோ, அல்லது 30 நாட்களாகவோ மட்டுமே இருக்கமுடியுமே தவிர, எந்தவொரு இஸ்லாமிய மாதமும், மற்றும் ரமலான் மாதமும் 28 நாட்களாகவோ, அல்லது 31 நாட்களாகவோ இருக்க முடியாது.

## <u>இஸ்லாத்தின் சிறந்த நிலை:</u>

மேலும் என்னுடைய தனிப்பட்ட பார்வையில், ஒரு நாடு என்பது பெரிய நாடோ, அல்லது சிறிய நாடோ,அங்குள்ள முஸ்லிம்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் செயல்படும் ஒரு காலம் உதயமாவதை நான் மிகவும் அவசியமானதாக பார்க்கின்றேன், மேலும், இதனை நான் மிகவும் விரும்பவும் செய்கின்றேன். உதாரணமாக இந்தியா என்று வரும்போது,இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களைப் பொறுத்தமட்டில், எல்லைகள், மாநிலங்கள்,மற்றும் மாவட்டங்கள் போன்ற வேறுபாடுகளைக் கடந்து ஒரே இஸ்லாமிய காலண்டரை பின்பற்றுவது என்பது நிச்சயமாக சாத்தியமான ஒன்றாகும். ஏனெனில், இது ஒரே நாடாக இருப்பதன் காரணத்தினாலாகும்.இதனை இன்னும் விளக்கமாக கூறவதானால், ஒரு இறையச்சம் உடைய முஸ்லிம், ஒரு புதிய இஸ்லாமிய மாதத்தின் ஒரு புதிய பிறையைப் பார்த்ததாக கூறும் பட்சத்தில், அதனை ஒரு நபரோ, அல்லது ஒரு மாநிலமோ இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் முதலில் அறிவிக்க வேண்டும். இதன் மூலம், ஒட்டுமொத்த இந்தியாவும் அதாவது கேரளா, மற்றும் தமிழ்நாடு போன்ற இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் ஒரே நேரத்தில் ஈகைப் பெருநாள், மற்றும் ஹஜ் பெருநாள் போன்றப் பெருநாட்களைக் கொண்டாட முடியும். இதுவே சிறந்த நடைமுறையாகவும் இருக்கின்றது. ஏனெனில், ஒரு பிறைச்சார்ந்த இஸ்லாமியக் காலண்டரை அடிப்படையாகக்கொண்டே அனைத்து விஷயங்களும் இருக்கும் பட்சத்தில், ஒரே நாட்டைச் சேர்ந்த முஸ்லிம்கள் வெவ்வேறான தருணங்களில் நோன்பு நோற்பதோ, அல்லது இரண்டு பெருநாள்கள் கொண்டாடுவது என்பதோ பார்ப்பதற்கு மிகவும் வருத்தமாக உள்ளது. மேலும், ஒரு திருமணமான தம்பதியைப் பொறுத்தமட்டில், அவர்கள் ஒரே ஜமாத்தைச் சேர்ந்தவர்களாக இல்லாத பட்சத்தில், அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென்று வெவ்வேறான நாட்களில் ரமலான் நோன்பு நோற்பதையும்,மற்றும் பெருநாள் கொண்டாட்டங்கள் செய்வதையும் பார்ப்பதற்கு மிகவும் வருத்தமாக உள்ளது. மேலும், நாம் ஒன்றுபட்டு இருந்தோமெனில், இந்தியா முழுவதும் ஒரே நேரத்தில் நோன்பு நோற்பது என்பது சாத்தியமாகும். இதுவே சிறந்ததாகவும் அமையும். இதன்மூலம், இந்தியாவால் தனக்கு சொந்தமான தனிப்பட்ட இஸ்லாமியக் காலண்டரை அமைப்பதற்கும் சாத்தியமாகும். இன்ஷா-அல்லாஹ்.

எனவே, **ஜமாத்து-ல்-ஸஹீஹ்-அல்** இஸ்லாத்தின் உறுப்பினர்கள் அனைவரும், ரமலான் நோன்பு நோற்பது, மற்றும் பெருநாள் கொண்டாட்டங்கள் வைப்பது தொடர்பாக, தங்களுக்கிடையில் ஒற்றுமையுடன் இருக்கவேண்டும். இதனால்,

ஒவ்வொரு மாநிலத்திலத்திலும் தலைவராக உள்ள ஒரு அமீர், தனது பொறுப்பின் கீழுள்ள உறுப்பினர்களுடன் ஒன்று சேர்ந்து, நபி பெருமானாரின் ஸுன்னத்திற்கேற்ப, ஒவ்வொரு மாதம் ஆரம்பிப்பதையும், மற்றும் முடிவடைவதையும் பிறையைப் பார்ப்பதன் அடிப்படையில் முடிவெடுக்க முடியும்.

## விதிவிலக்குகள்:

மேலும்,பிறையைப் பார்ப்பதற்கு நடைமுறையில் சாத்தியமில்லாத நாடுகளில், அதாவது இவ்வாறான விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், பிறையின் உண்மையான பிறப்பையும் மற்றும் பிறைத் தென்படுவதற்கான வாய்ப்பையும், மற்றும் அதன் உண்மையான பார்வையையும் தீர்மானிப்பதற்கு, அவர்கள் நவீன ஒளியியல் உபகரணங்களை பயன்படுத்தலாம். அல்லது ஒருவேளை,இதுபோன்ற நாடுகள் நவீன ஒளியியல் உபகரணங்களை உபயோகப்படுத்த விரும்பவில்லை என்றால்,அவர்கள் இந்த விஷயத்தில், தங்களுக்கு மிக அருகிலுள்ள அண்டை மாநிலத்தையோ, அல்லது நாட்டையோ, முறையான பிறைப் பார்த்ததற்கான தகவல்களின் அடிப்படையில் நம்பலாம். மேலும், நான் கூறியது போன்று, ஸஹீஹ்-அல்-இஸ்லாத்தைச் சேர்ந்த அனைவரும் ஒரே சமுதாயமாக ஒற்றுமையுடன் நோன்பை நோற்பதிலும், மற்றும் நோன்பை முறிப்பதிலும், மற்றும் ஜமாத்தாக பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதிலும் இருக்கவேண்டும். இன்ஷா-அல்லாஹ், ஒட்டுமொத்த முஸ்லிம் உம்மத்தையும் ஒற்றுமையான ஒரு உம்மத்தாக பார்க்கவேண்டும் என்பது எனது தாழ்மையான விருப்பமும், மற்றும் பிரார்த்தனையுமாகும்.

மேலும், நீங்கள் மறுமைநாள் வரை உங்களுடைய உள்ளங்களிலும், மற்றும் உங்களுடைய தலைமுறைகளுடைய உள்ளங்களிலும் மிகவும் நேரான பாதையிலான ஒரு தக்வாவை அடைவதற்கும், மற்றும் அல்லாஹ்வின் அருளால், இவ்வாறான முடிவுகளை எடுப்பதற்கு, திருக்குர்ஆன் மற்றும் ஸுன்னத்தின் சட்டங்களை மீறுவதற்கு பதிலாக, திருக்குர்ஆன், மற்றும் **பெருமானாரின்** ஸுன்னத்தின் அடிப்படையில் நடப்பதற்கும் அல்லாஹ் உதவி புரிவானாக, இன்ஷா-அல்லாஹ், ஆமீன்.

மேலும்,அல்லாஹ், **ஜமாத்துல் ஸஹீஹ்-அல்- இஸ்லாத்திலுள்ள** எனது அனைத்து ஸஹாபாக்களுக்கும்,மற்றும் **ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்)** அவர்களின் முழு உம்மத்திற்கும் அருள்புரியவும், மற்றும் அல்லாஹ், மற்றும் அவனது திருப்திக்காக, நம் அனைவரும் ஒற்றுமையுடன் இஸ்லாத்தின் ஒரே கயிற்றைப் பற்றிப்பிடிக்கவும் உதவிபுரிவானாக.

**இன்ஷாஅல்லாஹ் ஆமீன்**




# Jamaat Ul Sahih Al Islam